★ இலங்கைத் தூதர் பேர்னுட், ராஜீவுடன் பேசியதையடுத்து

பிரதமரின் செய்தியுடன்

# டிக்ஸிற், பூரி கொழும்பு திரும்பினர்!

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன எடுத்துள்ள முயற்சிகள் குறித்து நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு பேர்னுட் திலகரத்தின சந்தித்து விளக்கிக் கூறினர். இதேவேளை இனப் பிரச்சினை சம்பந்தமாக அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திவரும் இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற்றும் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து போராளிகள் குழுக்களின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் தீர்வில் கொண்டுள்ள நாட்டம்பற்றி விளக்கிக்கூறினர். இதன் பின்னர் பிரதமர் ராஜீவின் விசேஷ செய்தியொன்றை எடுத்துக்கொண்டு தூதுவர் டிக்ஸிற்றும், தூதரக முதற்செயலர் திரு. பூரியும் நேற்று மாலை விமான மூலம் கொழும்பு திரும்பியதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

விலை ரூபா 1 - 25    REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1    ஒலி 237    வியாழன் 23 - 07 - 1987    (ஆடி 7)    ஜூலை 26

★ செஞ்சிலுவைச் சங்க மூன்று பிரதிநிதிகள் சகிதம்

# 50லட்சரூபா உடுபுடவையுடன்
# நோர்வே குழு யாழ். வருகிறது!

## 2 அம்புலன்ஸ் வண்டிகளும் வருகின்றன

இராணுவத் தாகுதல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு தேவைப்படும் சுமார் ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான உடு புடவைகளுடன் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்று பிரதிநிதிகள் அடுத்த மாதம் ஆறும் திகதி இங்கு வரவுள்ளனர். இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இங்கு தங்கியிருந்து உணவு விநியோகம் செய்வது போன்று, நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உடுபுடவைகளை இங்கு தங்கியிருந்து நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிப்பர்.

நோர்வே நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு ஓடிரும், சர்வதேச பிரிவுத் தலைவர் திரு. அனெல் நோபொஜென், மற்றும் திரு கோம் ஆகிய மூவருமே இங்கு வருகைதரும் மூன்று உறுப்பினர்களாவர்.

இவர்களின் முதற்கட்ட உதவியாகவே ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் வழங்கப்படுவதாகவும், நிலைமையை நேரில் பார்த்த பின்னர் அடுத்தகட்ட உதவிபற்றித் தீர்மானிப்பர் எனவும் தெரியவந்துள்ளது.

இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளையும் இவர்கள் யாழ்ப்பாண மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

வடமராட்சி இனப்படுகொலையை அடுத்து இலங்கை அரசுக்கான சகல உதவிகளையும்

—6 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் அகதிகளின் தொகை 3லட்சத்து 36ஆயிரமாக உயர்வு

கடந்த மூன்றுமாத காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் ராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களால் அகதிகளின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளது. முன்பு ஒரு இலட்சத்து அறுபத்தோராயிரத்து ஐநூற்றி எழுபத்தேழாக இருந்த அகதிகளின் எண்ணிக்கை தற்போது மூன்றுலட்சத்து முப்பத்தாறுயிரத்து, ஐநூற்றி நாற்பத்தைந்தாக உயர்ந்துள்ளது.

இதனால் இவர்களைப் பராமரிக்கும் அகதிமுகாம்களின் எண்ணிக்கையும் எண்பதேழிலிருந்து, நூற்றி எழுபத்தேழாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரத்து எண்பது அகதிகள் தங்கியுள்ளனர். மிகுதி இரண்டு லட்சத்து இருபத்தாறுயிரத்து நானூற்றி அறுபத்தைந்துபேர் வரையில் பிற இடங்களில் வசிக்கின்றனர்.

இதில் யாழ் மாவட்டத்தில் மட்டும் முப்பத்தாறுயிரத்து ஐநூற்றி அறுபது குடும்பங்களைச்சேர்ந்த, ஒருலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எண்ணூறு அகதிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலா

—6 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு முகாமைச்சுற்றி அகழி வெட்டப்படுகின்றது

(சாவகச்சேரி)

ஆனையிறவு ராணுவ முகாமை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் அங்குள்ள ராணுவத்தினர் தமது கவனத்தைச் செலுத்துகின்றார்கள். இதன் முக்கிய நடவடிக்கையாக ஆனையிறவு முகாமைச் சுற்றி பெருமளவில் அகழிகள் வெட்டப்படுவதை நேற்று நேரில் காணக் கூடியதாக விருந்தது.

இத் தடைமுகாமில் நேற்று

—6 ஆம் பக்கம் பார்க்க

## கிட்டு, பாலசிங்கம், ரகுவுடன் எம். ஜி. ஆர். ரகஸிய பேச்சு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்பிரிவு ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், தளபதி கிட்டு (திரு. கிருஷ்ண குமார்), திரு ரகு ஆகிய பிரமுகர்கள் தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரனை சந்தித்து சுமார் அரைமணி நேரமாக பேசினர்கள்.

இப்பேச்சு விபரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லையாயினும் புதிய யோசனைகள் பற்றியே பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் தூதர் டிக்ஸிற், பூரி, மேனன் ஆகியோர் திரு அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியது தெரிந்ததே.

## எம்.ஜி. ஆர். பேச்சு நிலைபற்றி டில்லியில் விளக்கப்பட்டது

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ள புதிய யோசனைகள் பற்றி தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரனுடன் பேச்சுக்கள் நடாத்த சென்னை வந்த பாரத வெளியுறவு செயலாளர் திரு. கே. பி. எஸ் மேனன் குழுவினர் நேற்று முன்தினம் புதுடில்லி திரும்பினர்கள்.

திரு. மேனனுடன் இலங்கையிலுள்ள இந்திய தூதரக செயலர் திரு பூரியும் புதுடில்லி சென்றார்

திரு மேனன் தமிழகத்தில் நடாத்திய பேச்சுக்களின் விபரங்களை மத்திய அரசுக்கு விப

—6 ஆம் பக்கம் பார்க்க

ஒருவர் பலி; ஒருவர் காயம்:

## கோட்டையிலிருந்து ஷெல் நேற்றும் ஏவப்பட்டது!

யாழ். போதனா வைத்திய சாலை மீதான ராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் பற்றி விசாரணை நடாத்த முன்னாள் நீதியரசர் அலஸ் வருகைதர ஒரு நாள் மட்டும் இருக்கையில் நேற்றுக்காலை பத்து மணி தொடக்கம் யாழ் நகரை நோக்கி கோட்டை ராணுவ முகாமிலிருந்து ஒரு மணித்தியாலமாக மூர்க்கமான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

—6 ஆம் பக்கம் பார்க்க

# நிலையமாற்றம் வழங்க கடைசி நேரத்தில் மறுப்பு!
# வடமராட்சி மாணவர் பரீட்சை எழுதமுடியாத நிலை

(அச்சுவேலி)

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களை மாற்றிப் பரீட்சை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வடமராட்சி மாணவர்கள் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அண்மைய சம்பவங்களால் வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கும், தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கும் வந்துள்ள மாணவர்கள் வடமராட்சிக்குச் செல்ல முடிந்தாலும் அங்கு மன அமைதியுடன் பரீட்சை எழுத முடியாது என்பதனால் தாம் இடம் பெயர்ந்துள்ள பகுதியிலேயே பரீட்சை எழுத அனுமதி வேண்டினர். கல்வி அமைச்சு முன்பு அதிபர்கள் சங்கத்திடம் நிலையம் மாறிப் பரீட்சை எழுத அனுமதியளித்துப் பரீட்சை நெருங்கும் சமயத்தில் அனுமதியை இரத்துச் செய்ததனால் மாணவர்களும், பெற்றோர்களும் மிகவும் (6 ஆம் பக்கம் பார்க்க)

தீவிரவாத நடவடிக்கையால்

# எட்டு வருடத்தில் 34 கோடி நஷ்டம்

(கொழும்பு)

கடந்த எட்டு வருடங்களில் மட்டும், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கும், புகையிரத சேவைப்பகுதிக்கும் மொத்தமாக 34 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அரச உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

புகையிரத சேவைப் பகுதியினருக்கு 32 கோடி ரூபாவும், வடக்கு கிழக்கு பிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபைகளுக்கு 137 லட்சரூபாவும் நஷ்டமேற்பட்டுள்ளது. ஒன்றரை கோடி ரூபா பெறுமானமுள்ள போக்குவரத்துச் சபை உபகரணங்கள் தீவிரவாதிகளால் நாசமாக்கப்பட்டன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

## 4 பஸ்கள வந்தன

வடபிராந்தியத்தில் இருந்து தென் பிராந்தியத்திற்கு சில வருடங்களுக்கு முன்னர் திருப்பி எடுக்கப்பட்ட பஸ்களில் நான்கு தற்போது பருத்தித்துறை டிப்போவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தவைய மேலும் ஆறு பஸ்கள் விரைவில் பருத்தித் துறைடிப்போவுக்கு வந்து சேரவுள்ளன.

மாநகர ஆணையாளர் உத்தரவு:

# நல்லூர் ஆலய வீதியின் தனியார் வளவில் வர்த்தக நிலையங்கள் அமைக்கத் தடை!

## இதனை மீறினால் தண்ணீர், மின்சாரம் துண்டிக்கப்படும்

இம்முறை நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த உற்சவகாலத்தின்போது ஆலய சூழல் வர்த்தகமயமாக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது என யாழ். மாநகர ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் அறிவித்துள்ளார்.

ஆலயத்திற்கு அருகில் மாநகர சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டுமே வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு இம்முறை அனுமதிக்கப்படும் ஆலயசூழலில் தனிப்பட்ட எவராவது தமது காணிகளின் வேலிகளை வெட்டி வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு இடம் கொடுத்தால் அவர்களுக்கான மின்சார, குடிநீர் மற்றும் சேவைகள் இடைநிறுத்தப்படும் எனவும் அவர்கள் வேலிகளை மீண்டும் வீதி சீர்திருத்த ஆணைக்குழுவின் விதிக்கமையவே அமைக்க வேண்டும் எனவும் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆலய உற்சவ காலங்களில் காலை 4 30 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே ஆலய வீதிப்பகுதி போக்குவரத்துக்கு தடை செய்யப்படும். ஏனைய நேரங்களில் அப்பகுதியூடாக வாகன போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்படும்.

ஆலயஉற்சவ நேரம்தவிர்ந்த ஏனைய நேரங்களில் தேவையற்ற விதத்தில் ஆலய சூழலில் குழுமிநிற்க வேண்டாம் எனவும் ஆணையாளர் கோரியுள்ளார்.

# ஜி. சி. ஈ.(உ. த.) பரீட்சை விடைத்தாள்கள் ஹெலி மூலம் பலாலிக்கு வந்துசேரும்

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு கொண்டுவரப்படும் கல்விப் பொதுத்தராதரப பத்திர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பலாலிப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த விடைத்தாள்களை பலாலி இராணுவ முகாமில் வைப்பதற்கே முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை பரீட்சை நிலைய இணைப்பதிகாரிகள் இலகுவாக, பாதுகாப்பாக பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது இதேபோன்று மாணவர்களிடம் சேகரிக்கப்படும் விடைத்தாள்கள் உடனுக்குடன் பரீட்சை இணைப்பதிகாரிகளினால் பலாலிபொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப்படும். பின்னர் அவை இராணுவத்தினரால் பலாலிக்கு எடுத்துச் செல்லப்படும்.

## கடவுச்சீட்டு விண்ணப்பப் பத்திரம் இல்லை

யாழ். அரசாங்க செயலகத்தில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் இந்த கடவுச்சீட்டு படிவங்கள் தற்போது வெளியில் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## நினைவஞ்சலி



### சின்னையா பொன்னையா

பிறப்பு: 27-06-1927 இறப்பு: 18-07-1982

பிள்ளைகள்தம் திருமணத்தில்
கழுத்து நிறை மாலையுடன் - உம்
காலில் விழும் நன் நாளை
காண்பதற்கு காத்திருந்தோம்
மாறாக
கழுத்துநிறை மாலையுடன்
கண்மூடி நீர் படுக்க - உம்
காலடியை கட்டியழும்
கலக்கநிலை வந்ததென்ன

போலை,
பளை. மனைவி, மக்கள், மருமக்கள்

07081

## நினைவஞ்சலி



### பொன்னையா கணேஸ்

பிறப்பு: 17-07-1951 இறப்பு: 18-07-1982

மகனே
தொப்புள் அறுக்கையிலே
தொடர்பும் அறுந்திருந்தால்
கணநேர சலக்கத்தில்
கவலையை மறந்திருப்போம்
பாலூட்டி சீராட்டி
தாலாட்டி வளர்த்ததுவோ
வாலிபத்தின் ஓரத்திலே
வந்துவிட்ட நேரத்திலே
காலத்தின் பிடியுள் கரைந்து நீ போவதற்கோ...

போலை,
பளை. தாய், சகோதர, சகோதரிகள்.

07080


Rock Engineers & Contractors
in
WATER SUPPLY WORKS

எமது சேவைகள்

குழாய்க் கிணறுகள்
(மெஷின்கள் மூலம்)

கிணறு இல்லாதவர்கட்கு:-
நான்கு மணித்தியாலங்களுக்குள் ஓர் குழாய்க் கிணற்றை (Tube well) போதியளவு நீருடன் (காவி, உப்பு நீரை அகற்றி) 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாகப் பெறக் கூடியதாக அமைத்துத்தருவோம்.

கிணறு உள்ளவர்கட்கு:-
உங்கள் கிணற்றில் காவி நீரா, உப்பு நீரா, நீர் வற்றிவிட்டதா? எதற்கும் எம்முடன் கலந்தாலோசியுங்கள். போதியளவு நீரை உத்தரவாதத்துடன் பெற்றுத் தருவோம்.

தொடர்பு:
றெக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

07084



Computer Course
காலம்: 1½ மாதம்
25 7-87
9-30 a. m.
Initial Fee:
500/- only
IDP
குளப்பிட்டி
KOKUVIL
★ மானிப்பாயிலும் நடைபெறும்

07079



# முக்கிய அறிவித்தல்

லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர்கள், சகல சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களையும், துறைமுக ஊழியர்களையும் யூலை 23ம் திகதி 1987 வியாழக்கிழமை காலை 09 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் யாழ்ப்பாணம - மாவிட்டபுரம் - காங்கேசன் துறை வீதியினூடாக தேசிய அடையாள அட்டை, தொழிற்சாலை அடையாள அட்டைகளுடன் கடமைக்குச் சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றனர்.

பொது முகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

பொது முகாமையாளர்,
சிறிலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்,
130, W. A. D. மாவத்தை,
கொழும்பு — 02.

07082

நல்வாக்கு

அருமையான பயன்களை ஆராயவல்ல அறிவை உடைய அறிஞர், பயனில்லாத சொற்களை ஒரு போதும் சொல்ல மாட்டார்.

— திருக்குறள்

ஆர்.ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

## இதயநாதம்

## செயல்திறனின் சின்னம் கே. ஸி. தங்கராஜா

ஈழநாடு பத்திரிகையின் ஸ்தாபகரும், அதன் உரிமையாளருமான பெரியார் கே. ஸி. தங்கராஜா அவர்களின் திடீர் மறைவு, அவரைத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களையுமே பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு, இலங்கைத் தமிழரால் நடத்தப்படும் முதலாவது தமிழ்ப் பத்திரிகையென்ற 'தனி முத்திரை'யுடன் ஈழநாடு பத்திரிகையை 1959ஆம் ஆண்டில் ஆரம்பித்த தீர்க்கதரிசி இவர்.

அன்பர்களாலும், நண்பர்களாலும் "கே ஸி." என்று மனநிறைவாக அழைக்கப்பட்டு, நேசிக்கப்பட்டுவந்த பெரியார் தங்கராஜா, தமது இளவயதிலேயே தனது இனம், தனது மொழி தனது மண் என்ற சிந்தனைகளால் உந்தப்பட்டு தனது முழு வாழ்க்கையையும் இதற்காகவே தியாகம் செய்தவர்.

கே ஸி. தங்கராஜா என்றதும் ஈழநாடு பத்திரிகையை நிறுவியவர் என்று மட்டும் சிலர் நினைப்பதுண்டு.

இப் பெரியார் நாடளாவிய ரீதியில் தனது மக்களுக்கு ஆற்றிய சேவையில் இது ஒரு சிறு துளி மட்டுமே என்பது பலருக்கும் தெரியாது.

வடக்கு, கிழக்கு, மலையகம், தலைநகர் என்று எந்த வேறுபாடும் கொண்டிராத இவரது தமிழ்ப்பற்றை, அன்னார் ஆற்றிய பல்வேறு சேவைகளை ஆராய்வதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

அரசாங்க சேவையிலிருந்த தங்கராஜா அவர்கள், டைம்ஸ் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளர் பதவியை ஏற்பதற்காக 1947ஆம் ஆண்டில் தமது நிரந்தர அரச பதவியை ராஜிநாமா செய்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் டைம்ஸ் நிறுவனத்தின் உயர் பதவியில் திரு தங்கராஜா இருந்தார். இந்த நிறுவனத்தின் வெளியீடாக 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகையை வெளிக்கொணர்ந்த பெருமை இவருக்கே உரியது.

இதே காலத்தில் டைம்ஸ் நிறுவனத்தின் வெளியீடாக தமிழ்ப் பத்திரிகையொன்றை உருவாக்க முயற்சித்தபோதிலும், அவரது எண்ணம் அன்று கைகூடவில்லை.

இதன் வெளிப்பாடாக, 1958 இனக்கலவரத்தையடுத்து ஈழநாடு பத்திரிகையை இவர் வெளிக்கொணர்ந்தார்.

இது பெரியார் தங்கராஜா அவர்கள் யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கிய மிகப்பெரிய சொத்து.

தமிழ் மக்களின் தேவைகளை தலைநகரிலுள்ள பத்திரிகைகள் அம்பலப்படுத்தவும், அவற்றுக்காகக் குரல் கொடுக்கவும் அஞ்சிக்கொண்டிருந்த வேளையில், மிக மிகத் துணிச்சலாக ஈழநாடு பத்திரிகையை ஆரம்பித்து, தமிழ் மக்களின் ஏக போக குரலாக அதனை உருவாக்கினார்.

இதே சமயத்தில், வெளிமாவட்டங்களிலும் தனது சமுதாயச் சேவையை அன்னார் பரவலாக்கினார்.

தமிழகத்திலிருந்து டி. கே சி சகோதரர்களின் நாடகக் குழுவை இலங்கைக்கு வரவழைத்து நாடக நிகழ்ச்சிகளை நடத்தி அதன் மூலம் தலைநகரில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்கினார்.

இரத்மலானை இந்துக் கல்லூரியும், அதனுடன் இணைந்த ஆலயமும் தங்கராஜா அவர்களின் சேவையை எடுத்தியம்பும் பெரும் சின்னங்களாகும்.

தலைநகரில் தமிழர்கள் ஒன்று கூடவும், சமய வைபவங்கள், கலை நிகழ்ச்சிகளை நடத்தவுமென சரஸ்வதி மண்டபத்தை அமைத்து, அதனை இறுதிநாள் வரையிலும் சிறப்பாக நடத்திய பெருமையும் இவருக்கேயுண்டு.

தமிழர்கள் அகதிகளாக கொழும்புக்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு சமயத்திலும், சரஸ்வதி மண்டபம் ஆற்றியசேவை அளப்பரியது.

கொழும்பில் பிள்ளையார் பாடசாலையை ஆரம்பித்து (இன்றைய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) அதனைப் பெரும் ஆலவிருட்சமாக வளர்த்து விட்டவரும் இவரே.

கொழும்பு தமிழ்ச் சங்கம், இலங்கை காந்திய சேவா சங்கம், சற்றர்டே றிவியூ நிறுவனம் போன்றவைகளின் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெரியார் தங்கராஜாவின் சேவையின் வெளிப்பாடுகள்.

வாழைச்சேனை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனத்தின் தலைவராக பலவாண்டு பணிபுரிந்து அதனைக் கட்டி எழுப்பியவரும் இவரே.

இடது சாரிச் சிந்தனையாளராயினும், ஆலயங்கள் பலவற்றின் நிர்வாகியாக அரும் பணிகள் புரிந்துள்ளார்.

தனது பிரமச்சாரிய எண்பதாண்டு வாழ்வினை தனது இன மக்களுக்காக அர்ப்பணித்த பெருந்தகை.

பேச்சைக் குறைத்து, செயலில் சாதனைகள் புரிந்த பெரியார் கே. ஸி தங்கராஜாவின் புகழ் வானளாவியது.

உலகுள்ளவரை அது நிலைத்து நிற்கும்.

நேற்றைய தொடர்ச்சி

# தமிழ் இனம் தனி இனமாக அங்கீகரிக்கப்பட்டால் மட்டும் இலங்கை ஒன்றுக இருக்கும்!

1940-ல் சோல்பரி வெள்ளை அறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஜி ஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்து, அதன் மூலம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று எண்ணினர். சிறுபான்மையினர் 50 வீதமான பிரதிநிதித்துவம் பெற்றால் தமது பிரச்சினைகளுக்காக வாதிடலாம் என அவர் நினைத்தார். இது அன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவே அன்று தமிழர்களால் எண்ணிக்கை கூட்டுவதற்கான பிரேரணையே முன்வைக்கப்பட்டதொழிய பிரதேச ரீதியான கோரிக்கை முன்வைக்கப்படவில்லை.

ஆனால் சிறுபான்மை மக்களைப பொறுத்தவரை டொனமூர், சோல்பரி அறிக்கைகளில் அவர்கள் அதிருப்தி கொண்டிருந்தது உண்மை. இவ்விரு அறிக்கைகளும தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று திட்டவட்டமாக அறிந்திருந்தார்கள்.

டொனமூர் அறிக்கையை வாக்கெடுப்புக்கு விட்டபோது 19 பேர் அதை ஆதரித்தும் 17 பேர் அதை எதிர்த்தும் வாக்களித்தனர். 17 பேரும் சிறுபான்மையினர். சிறுபான்மையினரின் எதிர்ப்பின் மத்தியிலேயே அன்று அது அமுலாக்கப்பட்டது. ஆனால் சிறுபான்மையினரின் அந்த ஒற்றுமை நீடிக்கவில்லை.

சிறுபான்மை மக்கள் ஒரே ஸ்தாபனமாகத் தமது கொள்கைப்பிடியில் வலுவாக இல்லாததால் அவர்களுக்கு அற்ப சொற்ப ஆசைகளைக் காட்டி ஏமாற்றலாம் என்று டி. எஸ். சேனநாயக்கா நினைத்தார்.

அதில் அவர் வென்றும் விட்டார். சோல்பரி அரசியல் திட்டம் வந்தபோது மூன்று பேர் மட்டுமே எதிர்த்தனர். இதேபோல் தொடர்ந்துவந்த அரசுகளும் சிறுபான்மை மக்களுக்கு ஆசைகாட்டி உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வாருங்கள் என்று நம்பிக்கையூட்டி அழைத்தன. அந்நிலை இன்று வரை நீடிக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்தவுடன் முதற்கட்ட வேலையாக சர்வஜன வாக்குரிமை உள்ள இலங்கையில் இந்திய வம்சாவழித் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது அதைத் தொடர்ந்து பல்வகை சட்டங்கள் அமுல்படுத்த அது ஏதுவானது 1947-ல் சட்டசபையில் 101 பிரதிநிதிகளில் 33 பேர் சிறுபான்மையினராக இருந்தனர் பின்னர் சட்டசபையில் 168 பிரதிநிதிகளில் 32 பேர் சிறுபான்மையினராக இருந்தனர். இந்தச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவ குறைப்பைக்கண்டு தலைவர் செல்வநாயகம் 1949 -ல் தமிழரசுக்கட்சியை ஸ்தாபித்தார்

மலையக மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும்; தமிழர் ஒரு தேசிய இனம் என்று அங்கீகரிக்கப்பட வேண்டும்; அவர்களுக்குப் பாரம்பரிய வசிப்பிடம் உண்டு; அவர்களின் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை உண்டு எனும் கோரிக்கைகளை முன் வைத்தார். இக் கோரிக்கைகளை முன்வைத்து அவர் மக்கள் முன் சென்ற போது, முதல் தடவை தோல்வி கண்டாலும், இரண்டாம் தடவை தேர்தலில் மிகப்பெரிய வெற்றியுடன் தமிழரசுக்கட்சி பாராளுமன்றம் சென்றது. அப்போது தான் பண்டாரநாயக்கா செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டார்.

செல்வநாயகம் அன்று கூறியதுபோல தமிழ் மக்களிடம் ஒரு வலுவான ஸ்தாபன அமைப்பு இல்லாது விட்டிருந்தால் இன்றுவரை தமிழர் பிரச்சினையை தமிழர்களால் எதிர்த்து நிலைத்து நிற்க முடிந்திராது.

செல்வா தலைமையில் கால் நூற்றாண்டாக அரசின் எவ்வித சலுகைகளுக்கும் ஒத்துப்போகாது நிலையில் தன் கைப்பிடியில் தமிழரசுக்கட்சி இருந்தது.

அக்கால ஒப்பந்தங்கள் யாவும் பாராளுமன்ற வட்டத்துக்குள் பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய வகையிலேயே அகிம்சை வழியில் செய்யப்பட்டன இன்று இளைஞர்கள் தமது தியாகத்தை முன்வைத்துப் போராட, எமது பிரச்சினை சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்லப்பட்டு பல நாடுகளின் நிர்ப்பந்தங்கள் ஏற்படும்கூட இலங்கை அரசு இன்றும், அன்று செல்வநாயகம் முன்வைத்த கோரிக்கைகளைக் கூட நிறைவேற்ற முன் வரவில்லை.

★ கலாநிதி. சி. க. சிற்றம்பலம்

அன்றைய அகிம்சை போராட்டத்தை சிங்கள அரசு கையாண்ட விதத்தினாலேயே, இன்று தீவிரவாதத்தால்தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

ஜனநாயக போராட்டங்களை மாறிமாறி வந்த அரசுகள் தடைசெய்தன. 1962-ல் வடக்குகிழக்கில் 57 நாள் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தின் மீது இராணுவம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. கட்சி, கட்சிப்பத்திரிகை, மக்கள் எதிர்ப்பு என்பன பல முறை தடைசெய்யப்பட்டன. 56க்குப் பின் எத்தனை முறை அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இதிலிருந்து அரசின் அணுகுமுறைகளைத் தவறானவை என்றும், பிரச்சினைகளைத்தீர்ப்பதில் அரசு விசுவாசமாக இல்லை என்றும் தெரிகிறது

ஒப்பந்தங்கள் செய்யும்போது அவற்றைக் கனவான்கள் ஒப்பந்தங்கள் என்று அழைப்பார்கள். ஒப்பந்தம் செய்பவர்களுக்கு ஒரு பொறுப்பு உண்டு. ஆனால் இங்கோ ஒப்பந்தம் செய்தவர்கள் வாக்குறுதி அளித்தவர்கள் தாங்களே மறுக்கிறார்கள் அல்லது தங்களால் ஒன்றும், செய்ய முடியாது என்று கூறுகிறார்கள்.

பண்டாரநாயக்கா தன்னிச்சையாக ஒப்பந்தத்தைக் கிழித்தார். அதே ஒப்பந்தத்தைச் சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா பின்னர் அதை மறுதலித்தார். டட்லி சேனநாயக்கா தன்னுடைய இயலாமைக்குவருந்துவதாகக்கூறி ஒப்பந்தத்தைக் கிழித்தார்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் உண்டு. அவற்றைச் சர்வகட்சி மாநாட்டின் மூலம் தீர்ப்பேன்" என்று சொன்ன ஜே ஆர் அதை உடன் நிறைவேற்றவில்லை. மாறாக இந்தியாவின் நிர்ப்பந்தத்தால் கலவரத்தின் பின் நடை பெற்ற சர்வகட்சி மாநாட்டில் தமிழர்களுக்கு பிரச்சினை என்ன இருக்கிறது என்று கேட்டார்.

செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இவை தான் முடிந்த முடிவுகள் என்ற ரீதியில் செய்யப்படவில்லை அந்தந்தக் காலத்தில் தற்காலிக மாற்று நடவடிக்கைகளாகவே அவை முன்வைக்கப்பட்டன.

1949 ஆம் ஆண்டு செல்வநாயகம் நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்தபோது கூட இந்த ஒற்றை ஆட்சி முறையில் அதிக அங்கத்துவ பலத்தைக் கூட்டவும், சிறுபான்மை மக்களுக்கு குந்தகம் விளைவிக்கும் அரசின் செயல்களை தடுக்கவுமே அவற்றைப் பாவித்தார்.

அதே சமயம் சமஷ்டிக் கட்சி தனது அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காத வகையில் ஆராய்வது அவசியமானதாய் இருந்தது. பிரதமர் பிரதேச சபைகளின் நகல் மசோதாவை எடுத்துக்காட்டி சில கோரிக்கைகளை அதன் மூலம் நிறைவேற்றலாம் என்பதை எடுத்துக் காட்டியதைத் தொடர்ந்து இருபகுதிகளுக்கும் இடையே இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் முதல் அம்சம் வட மாகாணத்திற்கு ஒரு சபையும், கிழக்கு மாகாணத்திற்கு இரண்டிற்கு மேற்பட்ட சபைகளும் அமைக்க வழிவகுக்கப்பட்டது.

இரண்டாவது ஷரத்தில் ஒரு பிராந்திய சபை மேலும் பிரிக்கப்படவோ, அல்லது மாகாண எல்லைகளைக் கடந்து ஒன்றிணையவோ இந்த ஷரத்து வழி வகுத்தது

மூன்றாவது, இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளோ பொது நன்மையின் பொருட்டு ஒத்துழைக்க இது வழிவகுத்தது.

நாலாவதாக இவற்றின் அங்கத்தவர்கள் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு இது வழிவகுத்தது

இதில் அதிமுக்கிய அம்சமாகக் கணிக்கவேண்டியது பிராந்திய சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள்.

கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி சுகாதாரம், சூழல், மீன்பிடி, வீடமைப்பு, மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து முதலியன சம்பந்தமாக முழு அதிகாரமும் இந்தப் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டன.

1957-ல் இந்த சகல அம்சங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1960 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குக் கொடுக்கப்பட்ட கோரிக்கைகளில்இந்த அம்சங்களும் சேர்க்

— 4 ஆம் பக்கம் பார்க்க

அரசின் பத்தாண்டு சேவைபற்றி அமைச்சர் தொண்டா:

# எந்த ஒப்பந்தத்தையும் அரசு அமுல் செய்யவில்லை; இதனால் தமிழர் அரசை நம்பத் தயாராகவில்லை!

"கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில், இப்போது முடியும் பத்து வருட ஐ. தே. க. ஆட்சியிலேதான பெருந்தோட்டத் தொழிலாளர்க்கு எதிரான பாரபட்சம் குறைந்திருக்கிறது. இத்தொழிலாளர் சிறுபான்மையினரான தமிழர் ஆகையால், கோவில் வழிபாட்டு இயக்கம் போன்றவற்றால் இலங்கை அரசினை நெருங்கவேண்டியோர் ஆயினர். பிரஜாவுரிமை வழங்கப் பெற்றமை தற்போதைய ஆட்சியின் கீழ் எய்தப்பட்ட உருப்படியான ஒரு சாதனையாகும்" என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் தொண்டமான்.

"இதுவரை இழுபட்டுவந்துள்ள இனப் பிரச்சினையில் "தமிழர் இலங்கைப் பிரஜைகள் அல்லர்; அந்நியப் பிரஜைகளே" என்பது போலப் பாவனைபண்ணி, அவர்களோடு இலங்கை அரசு போரிட்டு வருகிறது. மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டம், இந்திய அரசோடு செய்துகொண்ட பல்வேறு ஒப்பந்தங்கள் என்பவற்றை அமுலாக்காமையே இதற்குக் காரணம். ஆக, தமிழர் இப்போது அரசை நம்புவதே கிடையாது. எனினும், இணக்கப் பேச்சுமூலம் அரசியல் தீர்வு சாத்தியமானால், அதற்கு இலங்கை அரசு தயார்.

இலங்கை இனப்பிரச்சினையில் முழு இந்து சமுத்திரப் பிராந்தியமும் சிக்குண்டு இருக்கிறது. ஐந்து மாதங்களாக யாழ்ப்பாணத்துக்கு உணவு செல்வதன்மீது விதித்திருந்த தடையோடு, மூன்று, நாலு நாட்களாக ஊரடங்குச் சட்டமும் தொடர்ந்தது. இதுகண்ட இந்திய அரசு, மனிதாபிமான அடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது வானத்தினின்றும் உணவைப் பொழிய வேண்டியது ஆயிற்று. அங்கு நிவாரணம் தேவையான இடத்துக்கு அதை அனுப்பும்படி இலங்கை அரசைக் கேட்பதைவிட, நேரடியாகக் குடாநாட்டுக்கு உதவுவது சிறந்தது என, இந்திய அரசு எண்ணிற்று.

இலங்கை உருப்படியான பொருளாதார அபிவிருத்தி அடைந்துள்ளமையை எவரேனும் மறுக்க இயலாது. கடன் வாங்கியே இதனை அடைந்தோம் என்கின்றனர் சிலர். நாம் கடனைத் தீர்ப்போம் என்ற நம்பிக்கையாலேயே பிற நாடுகள் எமக்கு அப்படி உதவுகின்றன" என்று அரசின் பத்தாண்டுச்சாதனை பற்றிக் குறிப்பிடுகையில் அவர் சொன்னார்.

## இப்படியும் சேவை

நெல்லியடியிலுள்ள சாராயபார் ஒன்றினை இராணுவத்தினர் உடைத்து அங்கிருந்த விலையுயர்ந்த மதுபானங்களை எடுத்துப் பருகினர். பின்னர் மதுபோதையில் அங்கு பூட்டியிருந்த வர்த்தகநிலையங்கள், புடவைச் சாலைகள் என்பவற்றை உடைத்து மிகவும் பெறுமதி வாய்ந்த உணவுப் பொருட்கள் உடுபிடவைகளை எடுத்து அங்குள்ள வயோதிபர்கள் பலருக்கு விநியோகித்தனர்.

பின்னர் அவ் வயோதிபர்களுக்கு, உமக்கு உணவு, உடை தேவைப்படும் பட்சத்தில் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் கூறினாராம்.

## இந்திய உணவு விநியோகம்

# தென்மராட்சி மக்களும் நிவாரணம் பெறுவர்

(சாவகச்சேரி)

மூன்றும் கட்டமாக விநியோகிக்கப்படவுள்ள இந்திய நிவாரண உணவுப் பொருட்களை வடமராட்சி மக்களுடன் தென்மராட்சி மக்களும் பெறவுள்ளனர். இவர்களுக்கான உணவு விநியோகத்தை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் யாழ் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் செயலக உயர் அதிகாரிகள், கிராம சேவகர்கள், ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கட்டைவேலி நெல்லியடி, புலோலி ப. நோ. கூ. சங்கங்களில் கையிருப்பில் உள்ள பொருட்களை கொடிகாமம் ப. நோ. கூ. சங்க எல்லைக்குள் தங்கியுள்ள வடமராட்சி மக்களுக்கு வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பணிப்பாளர் மன்சூர் வேண்டுகோள்:

# பரீட்சை சிறப்புற நடக்க அனைவரின் ஆதரவும் தேவை

(அச்சுவேலி)

கல்விப் பாரம்பரியத்தில் ஒரு நிலையான கல்வி மரபினைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மக்களும், ஆசிரியர்களும், அதிபர்களும், மாணவர்களும் பரீட்சைக்கடமை புரியும் உத்தியோகத்தர்களும் எதிர்வரும் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சகல ஒத்துழைப்பினையும் அளிக்கவேண்டுமென வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம் மன்சூர் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சைக்கடமை புரிபவர்களது கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அகில இலங்கை ரீதியாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 163 மாணவர்கள் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள். இதில் 9521 பேர் யாழ். மாவட்ட மாணவர்களாவர். இலங்கை பூராவுமுள்ள 809 பரீட்சை நிலையங்களில் 60 பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளன. எனினும் இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட யாழ்ப்பாணத்தில் மிகவும் அசாதாரண சூழ்நிலையில் நடக்கும் இப்பரீட்சைக்கு நாமெல்லாம் தேவையாயின் எமது உயிரையும் அர்ப்பணித்து கடமையினைச் சரிவரச்செய்து எமது பிரதேசத்தின் கல்விப்பாரம்பரியத்தைப் பேணிக்காக்க முயலவேண்டும்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் யாழ்ப்பாண மக்களது கல்விக்கு ஒருதனிப் பாரம்பரியமுண்டு எனவும், யாழ்ப்பாணத்து மக்கள் தமது கல்வியிலும், பரீட்சை நடவடிக்கையிலும் மிகவும் ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடந்துகொள்கின்றார்களென்றும் கல்வி அமைச்சர் புள்ளி விபரங்களுடன் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியபோது யாழ் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியில் மட்டுமன்றி இப்பிரதேசத்தவன் என்ற ரீதியிலும் நான் உளப்பூரிப்படைந்தேன். இந்நிலையினை நாம் தொடர்ந்தும் பேணிப்பாதுகாக்க உறுதிபூண வேண்டும் என்றும் சொன்னார்.

# மல்லாகம் இளைஞர் கழகம் அகதிகளுக்கு உதவி

(உடுவில்)

மல்லாகம் பிரஜைகள் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க மல்லாகம் இளைஞர் கழகத்தினர் அப்பகுதிப்பாடசாலைகளில் தங்கியிருக்கும் அகதிக்குடும்பங்களுக்கான சகல உதவிகளையும் செய்வதற்கு முன்வந்துள்ளனர்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாசாலையிலுள்ள அகதிகளுக்கு தற்காலிக கொட்டகைகள், மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கவும் அப்பகுதியிலுள்ள நான்கு பாடசாலைகளிலும் அகதிகளாகவுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், பாடநூல்களை இலவசமாக வாங்கிக் கொடுத்து, பாடசாலைகளில் சேர்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்யவும் இளைஞர் கழகம் முன்வந்துள்ளது.

இவ்வாறு மல்லாகம் பிரஜைகள் குழுவின் பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் மல்லாகம் ஞான வைரவர் கோவிலடி அகதி முகாம் அங்குள்ள இளைஞர் கழகத்தால் பொறுப்பேற்று நடத்தப்படுகிறது.

# 44 தமிழ் இளைஞர், யுவதிகட்கு தலா 2500 ரூபா அபராதம்

மோசடி விசா மூலம் வெளிநாடு செல்ல முற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 44 தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு நீர்கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தினால் தலா 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள் இரு வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நீர்கொழும்பு பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். விசாரணையின் போது இவர்கள் தங்களிடமிருந்த சகல பொருட்களையும் விற்று பெற்ற பணத்தின் மூலமே வெளிநாடு செல்ல முற்பட்டதாகத் தெரிவித்திருந்தனர். நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஈ. ஆர். டி. டி. பொன்சேகா விசாரணையை நடத்தினார்.

## தமிழ் இனம...

—3 ஆம் பக்கத் தொடர்ச்சி

கப்பட்டதுடன் மேலும் ஒரு கோரிக்கை சேர்க்கப்பட்டது. மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் நால்வர் அங்கம் வகிக்க வேண்டும் என்பதே அது. 1965இல் ஏற்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தத்தில் தமிழ் மொழிச்சட்டத்தின் கீழ் தமிழ்மொழி வடகிழக்குமாகாணங்களில் நிர்வாக பதவேட்டு மொழியாக அமுல் படுத்த விரைவில் நடவடிக்கை எடுத்தல், மாவட்ட சபைகளை அமைத்தல் என்பவற்றுடன் முக்கியமாக குடியேற்றம் சம்பந்தமான ஒரு கோரிக்கையும் இடம் பெற்றது. வடகிழக்கு மாகாண நிலங்கள் முதலில் அந்தந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கும் பின்னர் மாகாணங்களில் உள்ளவர்களுக்கும் பின்னர் இருபகுதியிலுமுள்ளவர்களுக்கும் அதன் பின்னர் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களுக்கும் பகிரப்பட வேண்டும் என்பதேயாகும்.

இவை அடிப்படை அம்சங்களை விட்டுக்கொடாமல் தமிழ் பிரதேசங்களை ஒன்று படுத்திய ஒப்பந்தங்களாகும். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் எதுவும் அமுல் நடத்தப்படவில்லை.

இதன்பின் 1972-ல் ஐக்கிய முன்னணியினரின் பசியா கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. தமிழ் பிராந்தியத்தை உள்ளடக்கியதாக ஆறு பிராந்தியங்களாக இலங்கை பிரிக்கப்பட்டு மத்தியில் ஒரு கூட்டாட்சி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தில் இது ஒரு கூட்டாட்சியுடைய நாடு என்று சேர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

77-ல் ஐ தே. கட்சி ஆட்சிக்கு வந்தபோது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்களின் பிரச்சினைகள் சகலவற்றையும் முன்வைத்தனர். அவற்றில் உள்ள சில —

தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை கொண்டுள்ளனர் என்பதை ஐ. தே. க. ஏற்றுக்கொள்கிறது. இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாததால் தமிழ் மக்களை தனி நாட்டு கோரிக்கைக்கு ஆதரவளிக்கத் தள்ளியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை ஆகியவற்றை மனதில் கொண்டு காலம் தாழ்த்தாமல் தீர்வு காணப்பட வேண்டும் என கட்சி நம்புகின்றது.

எமது கட்சி பதவிக்கு வரும் போது, கல்வி, குடியேற்றம், தமிழ்மொழி உபயோகம், தொழில் வாய்ப்பு ஆகியவற்றில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யும். அத்துடன் சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டி அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவோம் என்று ஐ தே க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டது.

சர்வகட்சி மாநாடு உடனடியாக கூட்டப்படவில்லை. மிகத் தாமதமாக இனக்கலவரத்தின் பின் 83ஆம் ஆண்டு கூட்டப்பட்டது.

எனவே, ஒப்பந்தங்களில் கூட்டாட்சி கேட்ட மக்கள் ஒப்பந்தங்களால் ஏமாற்றப்பட்ட நிலையில் 1976-ல் தமிழ் ஈழ தனிநாட்டு கோரிக்கையில் இறங்கினர்.

1977-ல் நடைபெற்ற தேர்தலும், 1978-ல் புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அரசு தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அல்ல, நாட்டின் அபிவிருத்தியை விஸ்தரிக்க மாவட்ட சபைகளை ஏற்படுத்தியுள்ளதாக 1980 ஆம் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டது.

அந்த மாவட்ட சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதன் மூலம் தமிழ்ப்பகுதிகளில் ஏதும் அபிவிருத்தி செய்யலாம் என்னும் நோக்கில் தமிழ் பிரதிநிதிகளும் அந்தச்சபை அமைப்பில் கலந்து கொண்டனர்.

இக்காலகட்டத்திற்தான் — 1977ற்குப்பின் அஹிம்சைவழி அதாவது பாராளுமன்றமோட்டுக்குள் நின்று போராட முடியாது என்ற முடிவுக்கு தமிழ் மக்கள் வந்தனர். இராணுவ தீவிரவாத முறைகள் மூலமே இது சாத்தியமென்ற நம்பிக்கை நாளடைவில் தமிழ் மக்கள் மத்தியில் வளரத் தொடங்கியது. இக்காலகட்டம்தான் தமிழர் வரலாற்றில் முக்கியமான காலகட்டமாகும். இளைஞர்கள் தமது இரத்தத்தைச் சிந்தி, எவ்வித பிரதிபலனையும் பாராது போராடத் தொடங்கிய காலகட்டம், இக்காலகட்டத்தில் 83கலவரத்தோடு பல யோசனைகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

1983ற்குப்பின் வட்டமேசை மாநாடு சர்வகட்சி மாநாடு, திம்புமாநாடு என 3 மாநாடுகளில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

1984-ல் 'சி' இணைப்பு எனும் ஒரு முக்கிய யோசனை முன்வைக்கப்பட்டது. மாவட்ட சபைகள் இணைந்து பிராந்திய சபைகள் ஆகும்படி வகுக்கப்பட்டு, உள்ளூர் பாதுகாப்பு, நீதி, சமூக பொருளாதார அபிவிருத்தி, தமிழ்மொழி உபயோகம், பிராந்திய நிர்வாகம், பிராந்திய இன விகிதாசாரப்படி பொலிஸ் நியமனம், விகிதாசாரப்படி இராணுவ ஆட்சேர்ப்பு என்பவற்றுக்கு வழி வகுத்தது. சர்வகட்சி மாநாட்டில் ஒத்துக்கொண்ட அரசு பின்னர் அதை கைவிட்டது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருதிருத்தங்களை கொண்டுவந்தது. அதில் ஒன்று உள்ளூர் பாதுகாப்பு முழுக்க முழுக்க இச்சபைகளிலேயே தங்கியிருக்க வேண்டும். மற்றையது டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொண்ட வகையில் குடியேற்றம் இருக்க வேண்டும் என்பதாகும். அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ளவர்கள் இதில் குடியேற வாய்ப்பளிக்க வேண்டும் என்பதாகும்.

அதன்பின் திம்புவில் தமிழ் அமைப்புகள் ஒன்றாக இணைந்து கொடுத்த கோரிக்கைகள் முக்கியமானவையாகும். அவை யாவன—

தமிழர் தாயகம், தமிழர் தேசிய இனம் என்பது, சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும். மலையக தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்கவேண்டும் என்பதாகும்.

அதன்பின் கூட்டணியினர் ஓர் நகல் திட்டத்தை ரஜீவ் காந்தியிடம் கையளித்தனர். அதில் இலங்கையில் இருசுயாட்சியமைப்புகள் இருக்க வேண்டும். அவற்றின் கூட்டாட்சியே மத்தியில் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

இந்த வகையில் எந்த ஒரு ஒப்பந்தமும் அரசால் அமுல் படுத்தப்படவில்லை. இதனால் தமிழ்மக்கள் இலங்கை அரசின் நாணயமற்ற தன்மையை புரிந்துகொண்டு இன்னொருவரின் மத்தியஸ்தம் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நிலைக்கு வந்தனர்.

மத்தியஸ்தர்களால் இப்பிரச்சினை அணுகப்பட்டபோதும் இன்றுவரை, மாகாண, மாவட்ட, பிராந்திய நிலைகளில் இப்பிரச்சினை சுழன்றபடியே உள்ளது. இன்றைய நிலையில் இனி என்ன வடிவம் எடுக்குமோ என்று தெரியாதுள்ளது.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும். தமிழ் இனம் தனி இனமாக அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே இலங்கை ஒன்றாக இருக்கும்.

# பொடிப்பொழுது

கடன் வழங்குசபை அரச ஊழியர்களிடமிருந்து அறவிட்ட பணத்தை வட்டித் தொகையுடன் மீள விக்குமாறு கடந்த ஆண்டு நவம்பர் மாதமே சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துவிட்டது.

ஆனால் யாழ். நீதி நிர்வாக வலய ஊழியர்களுக்கு இப்பணத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென அங்கலாய்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் வழங்கிய நிதியை எப்போது பெறமுடியுமென்பதே நீதித்துறை ஊழியர்களின் கேள்வி!

உக்கிரன்

வளைகுடாவில்

# அமெரிக்கக் கொடியுடன் குவைத் கப்பல் பயணம்

(குவைத்)

ஈரானின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது அமெரிக்கக் கொடியுடன் இரு குவைத் எண்ணெய்க் கப்பல்கள் வளைகுடாவில் தமது பயணத்துக்கு ஆயத்தமாகின. இவற்றுக்கு பாதுகாப்பாக அமெரிக்க யுத்தக் கப்பல்களும் அங்கு நிலை கொண்டுள்ளன.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு கிழக்கு கரையோரப் பகுதியில் சுமார் இருபது மைல் தொலைவில் இந்த எண்ணெய்த்தாங்கி கப்பல்கள் நங்கூரமிட்டிருந்தன. அவற்றில் அமெரிக்க தேசிய கொடிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

வளைகுடாவில் 550 மைல் தூரம் பயணம் செய்து குவைத்தை அடையவுள்ள இந்தக் கப்பல்கள் மீது ஈரான் நடாத்தும் எந்தவொரு தாக்குதல்களையும் முறியடிப்பதற்கு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தயாராக இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு வையின் பேக்கர் எச்சரித்துள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணை அருகில் செல்லும்போது ஈரான் தாக்கினால் அதுவே அதன் கடைசித்தாக்குதல் என இப்பகுதி அமெரிக்க கடற்படைத் தளபதியும் எச்சரித்துள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் பிரான்ஸின் கப்பல் ஒன்றின் மீதும் ஈரான் வளைகுடாவில் தாக்கியிருப்பதால் தனது இரு எண்ணெய்க் கப்பல்களை பாதுகாக்க யுத்தக்கப்பல் ஒன்றை அனுப்பப் போவதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

வளைகுடாவில் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க வந்துள்ள மூன்று பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல்கள் மீது ஈரான் தாக்கினால் பதிலடி கொடுக்கப்படும் எனவும் பிரிட்டன் அறிவித்துள்ளது.

## பங்களாதேஷில் வேலை நிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று ஆரம்பமான எதிர்க் கட்சிகளின் வேலை நிறுத்தத்தை முறியடிக்க பங்களாதேஷ் பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

இதன்படி முக்கிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## எழுத்தாளர் ஆதவன் காலமானார்

(சென்னை)

தமிழ் படைப்பு இலக்கிய எழுத்தாளர் ஆதவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கி மரணமானார். எழுபத்தைந்து சிறுகதைகளையும், இருபது நாவல்களையும் இவர் எழுதினார். இவற்றில் சில, பல மொழிகளில் வெளிவந்தன.

## இன்றைய பலன்

**மேடம்:** இலாபமதிகம், கல்வியால் மேன்மை, பணப்புழக்கம், தாய்வழி சம்பத்து விருந்தினர் வருகை, சயனபோசன சுகம்.

**இடபம்:** வீண் பகை. இனசனப் பிரிவு, இடமாற்றம், வாகனுதிகளால் நஷ்டம், கல்வியாளர்க்கு நன்மை, சமசுகம்.

**மிதுனம்:** உதவியால் கேடு, தூரதேச பிரயாணத்தால் துயரம். கொடுக்கல் வாங்கல் பிணக்கு, வீண்பகை, அலைச்சலதிகம்.

**கடகம்:** கவலை அதிகரிக்கும், பொருள் நட்டம், வீண் செலவு, பெரியோர் உதவி, பணக்கஷ்டம்.

**சிங்கம்:** சகோதரவழி உதவி, தானிய நிறைவு. பெரியோர் ஆசி. சகல காரியசித்தி, மகிழ்ச்சிப் பெருக்கு.

**கன்னி:** மாதா வழியால் கவலை, வாகன நஷ்டம், பூமிப் பிணக்கு, விவாகத்தடை, வாக்குக் கலகம்.

**துலாம்:** எதிரிக்கு வெற்றி, ஆயுதபயம், தடைப்பட்ட பணம் கிடைக்கும், காதலர் மனம்போல் வாழ்வு.

**விருச்சிகம்:** புத்திரரால் உதவி, பகை உறவாகும், புதுத்தொழில் விருத்தி, பொருட்பேறு, சயனசுகம்.

**தனுசு:** மாங்கல்ய விருத்தி, பூமியால் நன்மை, பிரயாண சுகம், வாகனப்பேறு, நல்லோர் ஆசி, விருந்துபசாரம்.

**மகரம:** வாக்குக் கலகம், பெண்களால் கவலை, பெரியோர் பகை, புத்திரரால் கலகம், வீண்பழி கேட்டல்.

**கும்பம்:** தனதானியவிருத்தி, வாகனவசதி, பிரயாணச் சிறப்பு, நல்லோர் நட்பு, கல்வியால் சிறப்பு, பதவி உயர்வு.

**மீனம:** வணிகர்க்கு இலாபம், பொருள் வரவு, சகோதர வழியால் நன்மை, எண்ணிய எண்ணம் கைகூடும்.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## சுகுணதீரன் இடமாற்றம்

யாழ் கல்வித்திணைக்கள கணக்காளராக திரு. இ. சுகுணதீரன் வவுனியாவிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். யாழ் கல்வித் திணைக்களத்தில் கணக்காளராகக் கடமை புரிந்த திரு. இ. யோகேவ் வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சோவியத் நட்புறவுச் சங்க கூட்டம்

இலங்கை சோவியத் நட்புறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 26 ஆம் திகதி ஞாயிறு மாலை 4 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் திரு. அ வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சோ கிருஷ்ணராசா, திரு சி நாகராசா, திரு விஜயானந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## அழிப்பைத் தடுக்க வேண்டுகோள்

உடுப்பிட்டி நாவலடியிலுள்ள வீடுகள் தகர்க்கப்பட்டு அழிக்கப்படுவதைத் தடுக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாவலடிப் பகுதிப் பிரமுகர்கள் யாழ் அரசாங்க அதிபர் திரு வீ. எம். பஞ்சலிங்கத்தை நேரில் சந்தித்து இராணுவம் வீடுகளை அழிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்துத் தமது வீடுகளைப் பாதுகாத்துத் தருமாறு கோரும் மகஜரொன்றைக் கையளித்தனர்.

## நயினாதீவு அடியார்களுக்கு வேண்டுகோள்

(காவலூர்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு பொருட்கள், காணிக்கைகள் கொடுக்க விரும்புபவர்கள் ஆலயத்திலுள்ள தனி நபர்களின் பெயர்களுக்கு அனுப்பாமல், தலைவர் அல்லது பொருளாளர், செயலாளர் என்ற பதவிப் பெயரிட்டு அறங்காவல் சபையினர் நயினை ஸ்ரீ நாகபூஷணி தேவஸ்தானம், நயினாதீவு என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி மேற்படி தேவஸ்தான அறங்காவல் சபைத் தலைவரும் யாழ். கச்சேரி பொது சனத் தொடர்பதிகாரியுமாகிய திரு த. குலசேகரம் கேட்டுள்ளார்.

## தார் பீப்பாக்கள் வந்தன

(எழுதுமட்டுவாழ்)

யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தி வேலைக்கென பெருந்தொகையான தார்ப் பீப்பாக்கள் பளை, நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

தார் வராததால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ஸியா உல் ஹக் சொல்கிறார்:

# காஷ்மீர் பாகிஸ்தானின் பகுதி; பாரதம் கண்டனமும் மறுப்பும்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் காஷ்மீர் பகுதி சேர்ந்துள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா உல் ஹக் கூறியிருப்பது இப்பிரச்சினை தொடர்பாக வெறியுணர்ச்சிகளை தூண்டிவிடுவதற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு சொல்லப்பட்ட ஒரு செயல் என்று பாரதம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் உள்நாட்டு நிலைமைகள் காரணமாகவே பாகிஸ்தான் ஜனாதிபதி இவ்வாறு கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் பாரத வெளியுறவு அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காஷ்மீர் முழுவதுமே பாரதத்துடன் ஒன்றிணைந்த ஒரு பகுதி என்பதை எவரும் அறிந்த, சட்டப்படி மறுக்க முடியாத பாரதத்தின் நிலை ஜெனரல் ஸியாவுக்கு தெரியாமல் இருக்க முடியாது எனவும் அந்த அதிகாரி கூறினார்.

சட்டவிரோதமான முறையில் பாகிஸ்தான் வசப்படுத்திக் கொண்டிருக்கும் காஷ்மீர் பகுதியை விட்டு பாகிஸ்தான் வாபஸ்பெற வேண்டும் என்ற பிரச்சினை ஒன்றுக்கே தற்போது தீர்வுகாணவேண்டியுள்ளது எனவும் அவர் கூறினார்.

சிம்லா உடன்படிக்கையின்படி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்று பாரதமும், பாகிஸ்தானும் முடிவு செய்துள்ளதையும் ஜனாதிபதி ஸியா மறுக்க முடியாது எனவும் சொன்னார்.

## யாழ். மாநகராட்சி மன்றத்தின் முக்கிய அறிவித்தல்

JAFFNA MUNICIPAL COUNCIL

இத்தால் சகல போக்குவரத்து வாகனங்களும் 31-07-1987 அதிகாலை 12. 01 மணியிலிருந்து 26-08-1987 நள்ளிரவு 12-00 மணிவரைக்கும் கீழ் வரும் பாதைகள் தெருக்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகின்றேன்.

01. அரசடிச் சந்திக்கும் 2-ம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்,
02. பிராமணக்கட்டுக்குளச் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில வீதியின் அப்பாகம்,
03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்,
04. பஸ் வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக கச்சேரி - நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தையடிச் சந்தியூடாகச் செல்லல்
05. 2-ம் கட்டை குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேன்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்ற அலுவலகம், யாழ்ப்பாணம்.

08070

20-07-1987

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

★ ஜப்பான் பேட்டியில் பிரதமர் பிரேமா:

# இனப் பிரச்சினைக்கு புதிய பேச்சுக்களா? எனக்குத் தெரியாது!

(டோக்கியோ)

"எந்தவகையிலும் எமது நாட்டின் பிரச்சினை ஒரு இனப்பிரச்சினை இல்லை. புதிய பேச்சு வார்த்தைகள் நடக்கமுடியும். ஆனால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. நாட்டுக்கு வெளியே நான் கடந்த சில நாட்களாக உள்ளதே இதற்கு காரணம்."

இவ்வாறு பிரதமர் ஆர். பிரேமதாஸ திங்கள் காலை ஜப்பானில் வைத்து என் எச் கே ஜப்பானிய தொலைக்காட்சிக்கு அளித்த விசேட பேட்டியொன்றில் கூறினார் அப்பேட்டியில் மேலும் பிரதமர் கூறியதாவது:

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டபின்பே எந்தவொரு தீர்வும் அமுல் செய்யப்படும். தீர்வு ஒற்றையாட்சி அமைப்புக்கும், எமது அரசியலமைப்புக்கும் உட்பட்டதாகவே அமையவேண்டும்.

எந்தவகையிலும் எமது நாட்டின் பிரச்சினை ஒரு இனப்பிரச்சினை அல்ல வெளிநாட்டிலிருந்து பிரிவினைவாதப் பயங்கரவாதிகளுக்கு உதவி கிடைக்காவிடின் நல்லெண்ண புரிந்துணர்வு அடைப்படையில் எம்மால் பிரச்சினையைத்தீர்க்க முடியும்.

வெளிநாட்டு தலையீடு இல்லாவிடின் எல்லவற்றிற்கும் எமக்கு தீர்வுகாண முடியும். கவலைக்குரிய அந்நிய தலையீட்டின்மூலம் ஜனநாயக விரோத குறறவியல் சக்திகளுக்கு ஆதரவு கிடைக்கிறது.

இந்தியா விமானம்மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டது எமது நாட்டின் இறைமையை மீறிய செயலாகும்.

பெருந்தொகையான தமிழ் மக்களுக்கு தங்கள் தாய் நாட்டில் பிரிவினை என்பது தேவையில்லை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பிரிவினை இயக்கங்கள் என்று அழைப்பதும் அர்த்தமற்றது.

ஒருசில விரக்தியடைந்த, பிழையாக வழிநடத்தப்பட்டவர்கள் அதில் இருக்கலாம். எது எவ்வாறெனினும் பிரிவினை எந்தப் பிரச்சினையையும் தீர்க்கப்போவதில்லை. இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

## வல்லிபுர கோவில் பகுதியும் ராணுவக் கட்டுப்பாட்டில்!

(சாவகச்சேரி)

வடமராட்சியில் உள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியையும் இராணுவம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிகள் நடைபெறுகின்றன

வடமராட்சி மேற்கு பகுதி கிழக்குப் பகுதியை இணைக்கும் இந்த ஆலயப்பகுதிக்கு அண்மையில் உள்ள ஆனைவிழுந்தான் சந்தி, வல்லிபுர கோவில் சந்தி, புள்ளிச் சாதி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் தற்போது நிலைகொண்டுள்ளனர்.

வல்லிபுர ஆழ்வார் கோவிலில் பல தங்குமடங்கள், குடிநீர் வசதிகள் உட்பட பல வசதிகள் உண்டு. அருகில் மணல் மேடுகள் இருக்கின்றன. எனவே இங்கு இராணுவத்தினர் முகாமிட்டு இருப்பதற்கு முயலுவதாக தெரிவிக்கப்படுகிறது அடிக்கடி இப்பகுதியில் இவர்கள் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ளது.

வடமராட்சியில் உள்ள மற்றொரு சரித்திரப் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி ஆலயம் இராணுவத்தினர் வசம் போனதுபோல வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் போய்விடலாம் என இந்துமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இங்கு மக்கள் வழிபாடுகளுக்கு செல்ல முடியாத நிலையும் ஏற்படடுள்ளது.

மக்கள் உரிமை இயக்கம் வேண்டுகோள்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை இலங்கைவர அனுமதியளிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் வன்செயல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கைக்கு செல்ல அனுமதிக்க வேண்டுமென மக்கள் உரிமை இயக்க செயற்குழு இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

எல்சல்வடோர், மொசாம்பிக், நிகரகுவா, உகண்டா போன்ற நாடுகளிலும் யுத்தங்கள் இடம்பெற்றபோது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அங்கு செயற்பட அனுமதிக்கப்பட்டது என்பதனையும் இவ் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தை அனுப்புவதன்மூலம் மக்களுக்கு சேவை செய்வதில் அரசுக்கு உண்மையாகவே உள்ள அக்கறையை எடுத்துக்காட்டலாம் எனவும் இங்கு கூறப்பட்டுள்ளது

## சீமெந்து ஆலை ஊழியர்களை கடமைக்கு வர அழைப்பு

காங்கேசன்துறை துறைமுகத்திலும சீமெந்துத் தொழிற்சாலைகளிலும கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் இன்று வேலைக்குத் திரும்பவேண்டுமென ராணுவம அறிவித்துள்ளது இவர்கள் காங்கேசன் துறைவீதி மாவிட்டபுரம சந்தி ஊடாக இன்று காலை 8 30க்கும் 10 30க்கும் இடையே கடமைக்கு வரலாம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற ராணுவ தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக துறைமுகத்திலும் சீமெந்து தொழிற்சாலைகளிலும கடமையாற்றும ஊழியர்கள் கடமைக்குச் செல்லாதிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

இத்தவேளையில, கடமைக்குச் செல்வதா இல்லையா என்பதையிட்டுத் தீர்மானிப்பதற்காக லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் கூட்டமொன்று காலை பத்து மணிக்கு மலலாகம சந்திக்கு அண்மையில் நடைபெறவுள்ளது சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களும், துறைமுக ஊழியர்களும் இது தொடர்பாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்கள் என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை

## முகாம்கள் விஸ்தரிப்பு

வடமராட்சியிலுள்ள இராணுவ முகாம்கள் கரையோரப் பகுதிகளையண்டி விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக கிராய் பிள்ளையார் கோவிலடி, குஞ்சர் கடை, மண்டான, யார்க்கரு, நெல்லியடி முதலான இடங்களில் மினி முகாமகளமைத்து அருகிலுள்ள பற்றைமரம் செடி கொடிகளை வெட்டி அப்புறப்படுத்துகின்றனர்.

## வயோதிபர்களை காணவில்லை

(சாவகச்சேரி)

வல்லிபுரக்குறிச்சி, மணற்காடு ஆகிய பகுதிகளில் வீடுகளில் இருந்த சில வயோதிபர்கள் காணமல்போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது வடமராட்சிப்பகுதிக்கு மீண்டும் சென்ற மக்கள் சில வீடுகளில் இருந்த வயோதிபர்கள் தற்போது அங்கு இல்லை எனவும கவலை தெரிவிக்கின்றனர்.

## மீண்டும் வருகின்றனர்

(சாவகச்சேரி)

வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து வந்தவர்களில் சிலர் மீண்டும் வடமராட்சிக்குத் திரும்பிச் செல்கின்ற அதேவேளையில், வடமராட்சியிலிருந்தும் சில குடும்பங்கள் வெளியேறி சரசாலை, மட்டுவில் போன்ற இடங்களுக்குத் தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கின்றனர்.

## ராணுவ அடையாள அட்டை வழங்கல் இடைநிறுத்தம்!

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட அடையாள அட்டை'கள் வழங்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகளுக்குத் தேவையான அட்டைகள் முடிவடைந்துவிட்டதாலேயே இவவேலைகள் இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. தேவையானளவு அட்டைகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டதும் மீண்டும் அவை வழங்கப்படும்.

ஏ. எப். பி. வெளியிட்ட செய்தி:

## ஈரோஸ் இயக்கம் தவிர்ந்த அனைத்து அமைப்பும் ஆதரவு

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள பிரதேச சுயாட்சித் திட்டத்தை 'ஈரோஸ்' இயக்கம் தவிர்ந்த ஏனைய போராளி அமைப்புக்கள் வரவேற்றுள்ளதாக 'ரூபவாஹினி' நேற்றிரவு தெரிவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதம அரசியல் ஆலோசகர் திரு. அன்டன் பாலசிங்கம் இது தொடர்பாக தெரிவிக்கையில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுகளை ஆரம்பிக்க இதன் மூலம் வழியேற்பட்டிருப்பதாக கூறியதாக ஏ எப். பி. செய்திஸ்தாபனத்தை ஆதாரங்காட்டி 'ரூபவாஹினி' தெரிவித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட). ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி. ஆர் எல. எப்.) ஆகிய அமைப்புக்களும் இதனை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்த 'ரூபவாஹினி', 'ஈரோஸ்' இயக்கம் இதைச் செயற்படுத்துவதற்கு தான் தடையாக இருக்கப்போவதில்லை எனக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தது.

## வீரமரணம

நேற்று கோட்டையில் இடம்பெற்ற நேரடி மோதலில் 'குமார' (சு தனபாலசிங்கம், உயிர்த்தராசகுளம்) வீரமரணமடைந்தார் இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கப்பல் உணவுகள் இறக்கப்பட்டன

இந்தியாவின் நான்காவது உணவுக் கப்பலான "நிக்கோரேட்" டிலிருந்து நேற்றுக் காலையில் பொருட்கள் இறக்கப்பட்டுச் சுன்னாகத்திலுள்ள களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. பொருட்கள் இறக்கப்படுவதைக் காலையில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், மாலையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் பார்வையிட்டனர்.

## கற்பக பிள்ளையார் திருவிழா

உரும்பராய் ஓடையம்பதி ஸ்ரீகற்பக விநாயகர் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளது.

எட்டாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் அமைதியான முறையில் நடைபெறவுள்ளன. திங்கள் மாலை பூங்காவனத் திருவிழா இடம்பெறும்.

### ஆனையிறவு ..

வழமையை விட கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர். பயணிகளைப் பல மணிநேரம் காக்கவைத்தே ராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டனர். இதனால் பயணிகளின் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

### 50 லட்ச ரூபா...

நிறுத்திய முதலாவது நாடு நோர்வே என்பது குறிப்பிடத்தக்கது.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினரின் யாழ் வருகை பற்றி 'முரசொலி' மட்டும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டது தெரிந்ததே.

### எப் ஜி ஆர்.

வித்தார். இதேபோலவே திரு. பூ யும் யாழ்ப்பாணத்தில விடுதலைப புலிகளின் தலைவர் திரு பிரபாகரனுடன் நடாத்திய பேச்சு விபரங்களை எடுத்துக் கூறினார்.

### நிலைய மாற்றம்...

வேதனையடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பரீட்சை மாணவர்களால் பகிஷ்கரிக்கப்படவுள்ளதென்று முன்பு வெளிவந்த செய்திகளால் எவ்வாறாவது வெளி மாவட்டங்களுக்குச் சென்றாவது பரீட்சை எழுதவென பரீட்சை நிலையத்தை மாற்ற எழுத்துமூலம் விண்ணப்பித்த சிலருக்கு மட்டுமே நிலையம் மாற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### தமிழர் அகதிகளின்...

னோர் அண்மையில் வடமராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாவர்.

இத் தகவல்கள் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

### கோட்டை.-

இதனைல் கொட்டடிப் பகுதியில் நின்ற ஒருவர் பலியானார், றஞ்சி (17) என்பவர் காயமடைந்தார் இச்சம்பவம் நடைபெற்றவேளை யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் நின்ற நோயாளர்களும், வார்ட்டுகளில் தங்கி நின்று சிகிச்சை பெற்றவர்களும் பீதியுடன் காணப்பட்டனர்.

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால யாழ்ப்பாணம், ஸ்ரானலி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 23. 07. 87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது